செ.வெ.எண்: 46/செப்டம்பர் தேதி :20.09.2019

# தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தருமபுரி மாவட்டத்திலுள்ள பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்திற்குட்பட்ட 69 ஏரிகள், குடிமராமத்துப்பணிகள் மூலம் தூர்வாரப்பட்டது. மழை நீர் சேமிப்பு மற்றும் செறிவூட்டும் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் உள்ள தூர்ந்து போன ஏரிகள், குட்டைகள், கிணறுகள் போன்றவை தூர்வாரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. 5 இலட்சம் மரக்கன்றுகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரைக்கும் 1.5 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் விற்பனை மாவட்டம் முழுவதும் தடைசெய்யப்பட்டுள்ளதால் பனை மற்றும் பனை விளைபொருட்கள் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. எனவே மாவட்டம் முழுவதும் 14இலட்சம் பனங்கொட்டைகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நடவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிரதம மந்திரி மாந்தன் யோஜன திட்டத்தில் 18 வயது முதல் 40வயது வரை உள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் பதிவு செய்து தங்கள் வயதிற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை செலுத்தி வரும் பட்சத்தில் 60 வயதிற்கு மேல் அந்த விவசாயிகளுக்கு மாதந்தோறும் ரூ.3000/- ஓய்வூதியம் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்காச்சோளம் மற்றும் இதர பயிர்களில் அமெரிக்கன் படைப்புழு தாக்குதல்கள் ஏற்படாமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகளாக விதை நேர்த்தி செய்தல், ஊடு பயிர் வளர்த்தல், இயற்கை ஒட்டுண்ணி முறை, பூச்சி மருந்து தெளித்தல் போன்றவற்றை பயன்படுத்தி படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தலாம் என விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் பருத்தி பயிரில் இளஞ்சிவப்பு காய் புழு ஏற்படாமல் இருக்க துவரை, தட்டை பயிறு, ஆமணக்கு ஊடு பயிர்களை பயிரிடும்போது இப்புழு தாக்குதல்கள் குறைவாக இருக்கும் என எடுத்துரைக்கப்பட்டது.

காய்ந்துபோன தென்னை, பாக்கு மரங்களுக்கு இழப்பீடு வழங்க மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேலும் தென்னை மரத்திற்கு 4முதல் 15வயதுக்குட்பட்ட ஒரு மரத்திற்க்கு ரூ.2.25/- பிரீமியம் செலுத்தினால் ரூ.900/- காப்பீட்டுத்தொகையும், 16முதல் 60வயதிற்குட்பட்ட ஒரு மரத்திற்கு ரூ.3.50/- பிரீமியம் செலுத்தினால் ரூ.1750/- காப்பீட்டுத்தொகையும் வழங்கப்படும். பிரீமியம் தொகையை Agriculture Insurance company_க்கு வங்கி வரைவோலையாக எடுத்து அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க கேட்டுகொள்ளப்பட்டது.

சொட்டுநீர் பாசனம் மற்றும் தொட்டி கட்டுதல் போன்ற திட்டங்கள் தோட்டக்கலை துறை மூலமாக தற்போது நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தக்காளி, கத்தரி, முட்டைக்கோஸ் போன்ற காய்களுக்கு காப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கத்தரி, தக்காளி, கொய்யா போன்ற நாற்றுகள் மானிய விலைகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இம்மாவட்டத்தில் தக்காளி சாகுபடி அதிகரிக்கும் நேரத்தில் அவற்றிற்கு அதிக விலை கிடைக்க தக்காளி ஜாம், ஜுஸ் போன்றவற்றை தயார் செய்ய Mobile Processing Bus அறிமுகம் செய்யப்பட்டுள்ளது எனவும் அதனை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள தெரிவிக்கப்பட்டது. மேலும் தக்காளி சாகுபடி சந்தைக்கு போக அதிக விளைச்சல் இருக்கும் பட்சத்தில் விவசாயிகள் ஒன்று சேர்ந்து குழு அமைக்கும் பட்சத்தில் தக்காளி ஜாம், ஜுஸ் போன்றவை தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

கால்நடை பராமரிப்புத்துறை மூலம் தமிழ்நாடு அரசு விலையில்லா ஆடு, மாடு, நாட்டுக்கோழிகள் போன்றவை வழங்கும் திட்டத்தில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு மற்றும் அசின் கோழி ஒரு விவசாயிக்கு 25 கோழிகள் வழங்கவும் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் மாதத்தில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. கோமாரி தடுப்பூசி 17வது சுற்று 4 மாத கன்று முதல் எல்லா வகையான மாடுகளுக்கும், சினை மாடுகள் உட்பட அனைத்திற்கும் போடப்படும் என விளம்பரப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகள் அட்டை வீடு, கூரை வீடு, ஒட்டு வீடு, மண்சுவர் போன்ற வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு ஆவாஸ் பிளஸ் என்ற திட்டத்தின் மூலமாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் போன்றவற்றிற்கு 270சதுர அடி நிலப்பரப்பில் வீடு கட்டித்தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் போன்ற அனைவருக்கும் இத்திட்டத்தின் கீழ் தற்போது வீடு கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் விவரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலரை அணுகி பயன்பெறலாம். சனத்குமார் திட்டத்தின் மூலம் 50 கோடி செலவில் வரட்டாறு, ஈச்சம்பாடி ஏரி ஆகிய ஏரிகள் தூர்வார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்கூட்டத்தில் தருமபுரி வேளாண்மை இணை இயக்குநர் திரு.இரா.கைலாசபதி, வேளாண்மை துணை இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.எம்.இளங்கோவன், முன்னோடி வங்கி மேலாளர் திரு.கண்ணன், வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். திரு.சண்முகம், மற்றும் வேளாண்மை துறை மற்றும் அதன் சகோதரத் துறை அலுவலர்களும், தருமபுரி மாவட்ட அனைத்து வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மனுக்கள் சம்மந்தப்பட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**